பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

# ஈழநாடு

# The EELANADU

மலர்: 20 ஆவணி 2 நம்ழான்: 13 இதழ்: 188
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18-8-78

"திடீர் விலை குறைப்பு"
இன்றுமுதல்
விற்பனையாகிறது

| | ரூ. ச. |
|---|---|
| சீத்தை - மொத்தவிலை | 7-10 |
| சீத்தை - சில்லறை விலை | 7-15 |
| வெள்ளைப் பப்பிளின் | 7-50 |
| கலர் பப்பிளின் | 7-50 |
| இறக்குமதிசெய்யப்பட்ட பூப்போட்ட நைலெக்ஸ் சாறி | 89-50 |

இன்றே விஜயம் செய்யுங்கள்!
க. நாகமுத்து அன் சன்
48, 50, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

RECEIVED ... PERIODICAL DIVISION ... LIBRARY ... CAMPUS

## பலூனில் பறந்து சமுத்திரத்தைக் கடந்தனர்

நியுயோர்க்ஆக. 17
பலூன் ஒன்றின்மூலம் முதற்தடவையாக அத்லாந்து சமுத்திரத்தை மூன்று அமெரிக்க வீரர்கள் வெற்றிகரமாகக் கடந்துள்ளார்கள்.

அமெரிக்காவின்கிழக்குக்கரைபட்டினமொன்றிலிருந்து 5நாட்களுக்கு முன் பலூனில் புறப்பட்ட இந்த 3 துணிச்சல்காரர்களும் அத்லாந்து சமுத்திரத்தைக் கடந்து தரையிறங்கியுள்ளனர். மொத்தம் 3500 கிலோமீட்டர் தூரத்தை இவர்கள் பலூனில் பறந்து உலகசாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

# சிகரட் - சாராயம் விலை அதிகரிப்பு!

## நேற்றுநள்ளிரவுமுதல்அமுல்

(கொழும்பு)
சிகரட், சாராயம் ஆகியவற்றின் விலை கடந்த நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளது.

சகலவித சிகரட்டுகளும் 5 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தென்னஞ்சாராயத்தின் விலை போத்தல் ஒன்றுக்கு ஒரு ரூபா 80 சதமும். கல்லோயா சாராயம் போத்தல் ஒன்றுக்கு ஒரு ரூபா 60 சதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சிகரட், சாராயம் ஆகியவற்றின் விலை அதிகரிப்பால் அரசுக்கு வருடாந்தம் 30 கோடி ரூபா மேலதிக வருமானம் கிடைக்குமென அரசு அறிவித்துள்ளது. (இ)

## 'அமிர் தலைமையில் தமிழ் ஈழம் நிச்சயம்'

(யாழ்ப்பாணம்)
'பல்லாண்டு வாழ்ந்து மேலும் களம் பல கண்டு எமது உரிமைகளையும், சுதந்திரத் தமிழ் ஈழத்தையும் பெற்றுத் தருவீர்கள் - என்ற அசையா நம்பிக்கை எமக்குண்டு'

இவ்வாறு சங்கானை தமிழர் விடுதலைக் கூட்டணி உபசெயலாளர் திரு. இ. சி. வி திருச்செல்வமும் நிர்வாகசபை உறுப்பினர் திரு. செ. ஜெயபாலகிருஷ்ணனும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்தின் 51-வது பிறந்த தினத்தையொட்டி அவருக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செயதியில் குறிப்பிட்டுள்ளனர். (உ)

## ஜனதா கட்சித் தலைவராக சரண்சிங் பதவி ஏற்பார்

### சந்திரசேகர் விலகுகிறார்

புதுடில்லி, ஆகஸ்ட் 17
இந்திய ஜனதா கட்சியின் தலைவர் பதவி முன்னாள் உள்துறை அமைச்சர் திரு. சரண் சிங்கிடம் வழங்கப்படவிருக்கின்றது.

ஜனதா கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்த்துவைக்கும் நோக்கத்தில் தான் இந்த ஏற்பாடு நடைபெறுகின்றது.

திரு. சரண்சிங்கிற்கு இடம் கொடுத்துவிட்டு தலைவர் பதவியிலிருந்து விலகிக்கொள்வதற்கு ஜனதா கட்சியின் இப்போதைய தலைவர் திரு. சந்திரசேகர் முன்வந்திருக்கிறார். இப்பதவியை ஏற்றுக்கொள்ள திரு. சரண்சிங்கும் ஒப்புதல் அளித்து விட்டதாக அவரது ஆதரவாளர்கள் கூறியிருக்கிறார்கள்.

இன்றுமாலை திரு. சரண்சிங்கும் பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாயும் சந்தித்து சுமார் 30 நிமிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

திரு. சரண்சிங்கின் ஆதரவாளர்களில் இருவரை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளவும் இணக்கம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

### கிளிநொச்சிப் பகுதியில்

## இரவு நேர பஸ்களில் ஆயுதப்பொலிஸ் பாதுகாப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சிப் பகுதியில் சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகள் அனைத்துக்கும் இரவு நேரங்களில் ஆயுதம் தாங்கிய பொலிசாரின் பாதுகாப்பு அளிக்கப்படும்.

கிளிநொச்சி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு. வராகொட இந்த ஏற்பாட்டை செய்துள்ளனர்.

குறிப்பாக அக்கராயன்குளம், கொக்கிளாய், நெடுங்கேணி, பூநகரி, புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகளில் இரவு வேளைகளில் ஆயுதம் தாங்கிய பொலிசார் பாதுகாப்பளிப்பார்கள்.

கண்டியிலிருந்து அதிகாலையில் யாழ்ப்பாணம் வரும் பஸ் வண்டிக்கும் இந்தப் பாதுகாப்பு அளிக்கப்படும். இந்த இந்த பஸ்ஸிற்கு முருகண்டி வரையில் மாங்குளம் பொலிசார் பாதுகாப்பு அளிப்பார்

(8-ம் பக்கம் பார்க்க)

## எம். பி. பேசிய கூட்டத்தில் கல்லெறி!

(நமது நிருபர்)
வடபகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் ஒருவர் பேசியகூட்டத்தில் கல்லெறி விழுந்ததாக அறியப்படுகிறது.

வேலைவாய்ப்புக்கான பத்திரங்கள் வழங்கப்பட்டதில் அதிருப்தி கொண்ட சிலர் இந்த விஷமத்தனத்தில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகின்றது.

### தோட்டப்பாடசாலை ஆசிரியர்

## பென்ஷன் திட்டத்தை துரிதமாக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
தோட்டப்பாடசாலைச் சேவையை பென்ஷன் திட்டத்தில் சேர்க்கும் விடயத்தை துரிதப்படுத்துமாறுகல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று இலங்கை ஆசிரியர் சேவைச்சங்க நிர்வாக சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆசிரியர் பயிற்சி, இலங்கையில் இன்றைய ஆசிரியர்களின் நிலை, சமூகத்தில் ஆசிரியரின்பங்கு ஆசிரியர் தெரிவுக்கு அடிப்படைந்தராதரம் என்பனவற்றை ஆராய்ந்து தமது யாசேனைகளையும் கல்விச் சீர்திருத்தக் குழுவுக்கு இச்சங்கம் அனுப்பியுள்ளது. (இ)

## அரசாங்க விடுமுறை நாட்கள் குறையும்!

(கொழும்பு)
அரசாங்க ஊழியர்களின் விடுமுறைகளை 137 நாட்களாகக் குறைக்க பொது நிர்வாக உள்நாட்டமைச்சு தீர்மானித்துள்ளது.

சனி, ஞாயிறு, பொதுவிடுமுறைத்தினங்கள் உட்பட 140 தினங்களை விடுமுறையாக இருக்கக் கூடிய விதத்தில் புதிய விடுமுறைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறு பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சுக்கு அமைச்சர் திரு. மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரம உத்தரவிட்டுள்ளார்.

இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ளது போன்று விடுமுறைத் திட்டத்தை இலங்கையிலும் தயாரிக்குமாறும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை சிறந்தமுறையிலும் துரிதகதியிலும் நடைமுறைப்படுத்தவே விடுமுறைத் தினங்கள் குறைக்கப்படுகின்றனஎன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

# "முருகனை நம்புங்கள் உங்கள் கஷ்டங்கள் தீரும்!"

(மாவிட்டபுரம்)
எந்தக்கஷ்டம் வந்தாலும் முருகனையே நம்பி இருப்பவள் நான். தள்ளாத வயதிலும் இங்கு என்னை அழைத்துவந்தவன் முருகன்தான். இலங்கையில் வாழும் தமிழ் மக்களாகிய நீங்களும் தமிழ் தெய்வமாம் முருகனை நம்புங்கள். உங்கள் கஷ்டங்களையெல்லாம் நிவர்த்தி செய்வான்.

இவ்வாறு நம்பிக்கையுடன் கூறினார் முருகன் பக்தையும் தமிழக இசை யரசியுமான திருமதி கே.பி. சுந்தராம்பாள்.

சில தினங்களுக்கு முன் பலாலி விமான நிலையத்திலிருந்து தாயகம் திரும்புவதற்கு முன் இலங்கை மக்களுக்கு விடுத்த ஒரு செய்தியில் திருமதி சுந்தராம்பாள் இவ்வாறு கூறினார்.

'நான் சிறுவயதுமுதல்இங்கு வந்து தங்கிப் போயிருக்கின்றேன். மூன்று தலைமுறை ரசிகர்களைக் கண்டு விட்டேன். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கலாரசனை வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது. அவர்களது ரசனைக்கு நிகர் இல்லை. அதனை இங்கு

## இலங்கை தமிழ் மக்களுக்கு இசையரசி விடுத்த செய்தி

நடத்திய கச்சேரியின்போது அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்டேன். கொட்டும் மழை வெள்ளத்தில் நின்று பலமணிநேரம் இசை நிகழ்ச்சியை ரசித்த காட்சியை நான் எங்குமே கண்டதில்லை. மழை வெள்ளத்தை மக்கள் வெள்ளம் வென்றது என்றால் அதற்குக் காரணம் ரசனையே தவிரவேறில்லை. யாழ்ப்பாண மக்களின் கலாரசனை மென்மேலும் வளரவேண்டுமென்பதே எனது விருப்பம் என்றார் அவர்.

அவர் மேலும் கூறியதாவது:
ஈழத்து மக்கள் எனக்குப் புதியவர்களல்லர், சிறுவயது முதல் நான் இங்கு வந்து போயிருக்கின்றேன். தற்போது 71 ஐ தாண்டியுள்ளதால் இனிமேல் இங்குவர சந்தர்ப்பம் கிடைக்குமா என்று கருதியே அழைப்புக் கிடைத்ததும் 'ஆம்' என்றேன். கடந்த ஒருமாதகாலமாக யாழ்ப்பாணத்திற்கு எப்போது செல்வேன். எனது சகோதரர்களை எப்போது காண்பேன்' என்று துடித்துக் கொண்டிருந்தேன். நான் வணங்கும் முருகன் அதற்கு வழிசெய்துவிட்டான்.

(8ம் பக்கம் பார்க்க)

## மஞ்சத் திருவிழா: விசேட பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)
நல்லூர் கந்தசுவாமிகோவில் மஞ்சத்திருவிழா இன்று மாலை 5-45 மணிக்கு ஆரம்பமாகும். உற்சவத்தைமுன்னிட்டு, அடியார்களின் நலன்கருதி யாழ்குடாநாடு பூராகவும் விசேட பஸ் சேவைக்கு யாழ். டிப்போ ஒழுங்குசெய்துள்ளது.

ஜன நெரிசலைக் கட்டுப்படுத்த விசேட பொலிசார் இன்று சேவையில் ஈடுபடுவர். (கெ)

## வரி விளம்பரம்

### பயிற்சி

16—22 வயதுடைய இளைஞர்கட்கும் யுவதிகட்கும் 3 மாதகால பொதுவிவசாயப் பயிற்சி அளிக்கப்படும். ஊதியம் கொடுபடும். காலையில் சான்றிதழ்களுடன் உடனடியாக நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனுமடம். 0083

### தேவை

விற்பனைப் பிரதிநிதி மூவர் தேவைப்படுகின்றனர். தொடர்பு கொள்க: E. A. E. I. D. கம்பெனி பிரதான வீதி காங்கேசன் துறை. 0074

### விற்பனைக்கு

கச்சானும், தேங்காயும் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்கப்படும். கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். E. A. E. I. D. கம்பெனி பிரதான வீதி, காங்கேசன்துறை. 0073


## முதலாண்டு நினைவாஞ்சலி

திரு. வ. சின்னத்துரை (Accountant C. G. R.)



தோற்றம்: 20-5-1929
அகால மரணம்: 18-8-1977

ஆண்டாண்டு தோறும்
அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ
மாநிலத்தீர்—வேண்டா
நமக்கு மதுவழியே
நாம் போமளவும்
எமக்கென்னென்றிட்
டுண்டிரும்.

அன்பு மகன்
சி. கிருபாகரன்

தலமன்கலட்டி,
தெல்லிப்பழை. 0084

## ஏழாலை கிராமாட்சி மன்றம் கேள்வி விளம்பரம்

மேற்படி கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளரால் 28-08-78-ந் திகதி காலை 09-30 மணி வரை பின்வரும் வேலைகட்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. கேள்விப்பத்திரத்தை கேள்விப் பிணைப்பணம் ரூபா 100/-ம் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 15/-ம் செலுத்தி கிராமாட்சி மன்றபணி மனையில் 24-08-78-ந் திகதி மாலை 3-00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்விப்பத்திரங்கள் 22-08-78-ந் திகதி தொடக்கம் 24-08-78-ந் திகதி வரை பணம் கட்டியதின் பேரில் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை கிராமாட்சி மன்றப் பணிமனையில் அல்லது யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் அறிந்துகொள்ளலாம்

### வேலை விபரங்கள்

1. குப்பிளான் சமாதி கோவில் கிணறு வெட்டல்
2. புளியடி வைரவர் வீதி அமைத்தல்
3. மாவத்தை வீதி அமைத்தல்
4. மைலணி—கோட்டைக் காடு வீதி அமைத்தல்
5. சந்தை அமைத்தல், ஏழாலை வடக்கு
6. சந்தை அமைத்தல் மைலங்காடு, ஏழாலை.
7. சிவன் கோவில் வீதி (மிகுதி வேலை)

ஒப்பம்
மா. இராசரட்ணம்,
விசேட ஆணையாளர்,
ஏழாலை.

கிராமாட்சி மன்றம்,
ஏழாலை.
16-08-78. 0078

## யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் 6ஆந் தரப் பிரவேசப் பரீட்சை 1979

மேற்படி பரீட்சை 1978-11-04ஆந் திகதி சனிக்கிழமை வடமாநிலக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும். விண்ணப்பங்கள்குறித்த பாடசாலை அதிபர்களால் 1978-09-30வரைஏற்கப்படும். மேலதிகவிபரங்களுக்கு குறித்த பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொள்க.

ஒப்பம்:
தி. மாணிக்கவாசகர்
வடமாநில கல்வி அதிபதி
0085

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்

காலஞ்சென்ற இரத்தினம் புவனேந்திரம் பெண் கிருஷ்ணதாய் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

இரத்தினம் புவனேந்திரம், கிருஷ்ணகிரி, சுன்னாகம்.

மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம் T/9

எதிர்

1. பொர்ணண்டோ பெண் புவனம்பிகை
2. லக்கி பொர்ணண்டோ, இருவரும் 13, றைட் சேக்குளர் வீதி, ஜயந்திபுரா, பத்தறமுல்லை
3. புவனேந்திரம் மகள் இந்திராம்பிகை
4. புவனேந்திரம் புவணகிருஷ்ணா
5. புவனேந்திரம் இந்திரகிருஷ்ணா எல்லோரும் கிருஷ்ணகிரி, சுன்னாகம்

பராயமற்றவர்
எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 1-ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னரே தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
றிச்சட் ஜெயராசசிங்கம்,
பதிவாளர்.

1978-ம் ஆண்டுவைகாசிமாதம் 26-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

தயாரித்தவர்:
கு. விஸ்வலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
0070

## புதிய மைதானம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தினரின் புதிய விளையாட்டு மைதானம், நாளைமுதல் இயங்க ஆரம்பிக்கும். பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் நிர்மானிக்கப்பட்ட இந்த புதிய விளையாட்டு மைதானத்தை டாக்டர் ஜே. பி. எவி. பிலிப்ஸ் திறந்து வைப்பார்.

## "இன ஐக்கியத்திற்கு 'புதியபூமி' சிங்களத்திலும் வெளிவரவேண்டும்"

-- கே. டானியல்

(புங்குடுதீவு)

'இன அடிப்படையிலும் சமூதாய சம்பிரதாய அடிப்படையிலும் இதுவரைகால வரையிருந்துவந்த வழக்குகளை உடைத்தெறிவதில் 'புதிய பூமி' நாவல் ஓரளவு வெற்றி கண்டுள்ளது. ஈழத்தில் இதுவரை வெளிவந்த தமிழ்நாவல்களில் தேசத்தின் மற்ற இனமான சிங்கள இனத்து கதாபாத்திரங்களை உலவவிடுவது தவிர்க்கப்பட்டு வந்துள்ளது. அதையும்மீறி தமிழ்நாவல்களில் வந்திருந்தால் சிங்களப் பாத்திரங்களை சமையல்காரர்களாகவோ அன்றி கார்ச்சாரதிகளாகவோ மட்டும்தான் இடம்பெற வைத்துள்ளனர். நாவலாசிரியர்கள். புதியபூமி பெருமளவுக்கு பாத்திர வார்ப்புகளில் சாதாரண சிங்கள மக்களை உள்ளடக்கியிருப்பதும், அவர்களை வாசகர்கள் மறக்க முடியாத அளவுக்குச் சித்தரித்து இருப்பதும் இந்த நாட்டின் தன்னிறைவான உறவுக்கு வித்தாக அமைந்துள்ளது போற்றற்குரியது.'

இவ்வாறு எழுத்தாளர் கே. டானியல் தீவக இளைஞர் முன்னணியினர் புங்குடுதீவில் நடாத்திய 'புதியபூமி' நாவல் ஆய்வரங்கில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

சட்டத்தரணி ஏ. எஸ். நடராஜா தலைமையில் புங்குடுதீவு பெருங்காடு கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற ஆய்வரங்கில் திரு. டானியல் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'இந்த நாவலாசிரியரின் முன்னுரையிலிருந்து நாவலின் கருப்பொருள்பற்றி ஒரு சலனம் ஏற்பட்டிருப்பதாக உணர முடிகிறது. தமிழ்மக்களுக்கும் சிங்களமக்களுக்குமிடையே அடிப்படையான முரண்பாடுகள் வர்க்க முரண்பாடுகள்தான் என்பதை நாவல்மூலம் சொல்லியுள்ள ஆசிரியர் இந்த மூலக்கருபற்றி முன்னுரையில் சலனப்பட்டிருப்பது ஆச்சரியத்துக்குரியது. நாவல் சொல்லும் மூலக்கருவே நிரந்தரமானது என்பதை லாசிரியர் நாதுணிவுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். வெளியீட்டாளர் இந்நாவலை சிங்களத்தில் வெளியிடுவது நாட்டின் ஐக்கியத்துக்கு உதவுமென்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.'

தீவக இளைஞர் முன்னணித் தலைவர் திரு. வி. ரி. இளங்கோவன் பேசுகையில், 'தமிழ் மொழி பேசுகின்றவன் என்பதற்காக தமிழ்பேசும் முதலாளி சுரண்டாது விடுவதில்லை. மொழிமூலம் ஐக்கியமென்பது கிடையாது என்பதை இந்நாவல் நன்கு சித்தரிக்கிறது' என்றார்.

சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் பேசுகையில், ஞானரதன் போன்ற திறன்மிக்க இளம் எழுத்தாளர்கள் தமிழ்இனத்தின் அவலம் குறித்து படைப்புக்கள் வேண்டும்' என்றார். திருவாளர்கள் எஸ். பாலச்சந்திர சி. மாணிக்கம், வே. க.சோமசுந்தரம், ஆ. வை. லோகநாதன், த. இரவிகுமாரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (அ)

## அறிவித்தல்

ஆனைக்கோட்டை
காலஞ்சென்ற வழக்கறிஞர்
சோமசுந்தரம்
திருநாவுக்கரசு
அவர்களிடமிருந்த உறுதிகள், வேறு பத்திரங்கள் யாவும் (கிளாக்) திரு. N. இளையதம்பியிடம் கொடுக்கப்பட்டுவிட்டன. உடமையாளர் அவரிடம் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கிறேன்.

திருமதி
க. திருநாவுக்கரசு,
ஆனைக்கோட்டை.

0080 16-8-78

## 'தமிழிசைத் தீபம்' நூல்வெளியீடு

(கொழும்பு)

கலாயோகி நூற்றாண்டு நிறைவுவிழாவும் 'தமிழிசைத் தீபம்' என்னும் நூல் வெளியீட்டு விழாவும் இன்று கொழும்பில் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. 'தமிழிசைத் தீபம்' என்னும் என்னும் நூல் பேராதனை வளாக மருத்துவ பீட விரிவுரையாளர் திரு. சச்சிதானந்தம் ஸ்ரீ காந்தாவினால் எழுதப்பட்டதாகும்.

இவ்விழாவிற்கு சிறப்புவிருந்தினராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் நல்லூரர் எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் கலந்து கொள்கின்றார்.

இவ்விழாவில் மன்னர் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் கரவையூர் ச. ம. செல்வரத்தினம் அடிகளார் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

(பரு. நிரு.-இ)

## 13 எதிரிகளும் விடுதலை

(யாழ்ப்பாணம்)

வெல்லம்பிட்டி கைக்குண்டு வழக்கில் 11 நாள் விசாரணைக்குப்பின் 13 எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவவழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எச். ஏ. எஸ். டி. சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

எதிரிகள் சார்பில் சட்டத் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்), சட்டத்தரணி உபாலி குணரத்ன, சடடத்தரணி எஸ். கே. தம்பிப்பிள்ளையின் உதவியுடன் ஆஜரானர். (க-அ)


நிற்பதும் நடப்பதும் உன் செயலாலே, நினைப்பதும் நிகழ்வதும் உன் செயலாலே.

முருகன் அடியார் இனிதேவாழ்க !

சிறந்த வேலைப்பாடுள்ள தங்க, வைர நகைகளைத் தெரிவு செய்ய நம்பிக்கையான ஸ்தாபனம்

# செ. சிவபாதலிங்கம்

வைரக்கல் நகை வியாபாரம்.

220, கஸ்தூரியார் வீதி - - - யாழ்ப்பாணம்.

ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

# "வரலாற்றுக் கண்ணோட்டம்மிக்க முதுபெரும் தீர்க்கதரிசி"

## வீரசிங்கம் மண்டப விழாவில்பண்டிதமணிக்குப் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

''கலாநிதி, பண்டிதமணி ஐயா அவர்களின் 'சிந்தனைக் களஞ்சியம்' என்ற தமிழர் பாரம்பரியம் விளக்கும் நூல் எமக்கும் எதிர்கால சந்ததிக்கும் பயன் மிகத்தரவல்ல அற்புத நூலாகும்''

இவ்வாறு யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கலாநிதி பண்டிதமணி சி கணபதிப்பிள்ளைக்கு எடுக்கட்பட்ட பாராட்டு விழாவில் பண்டிதமணி எழுதிய 30 கட்டுரைகளை உள்ளடக்கிய 'சிந்தனைக் களஞ்சியம்' என்ற நூலை வெளியிட்டு வைத்துப் பேசுகையில் கூறினார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பேராசிரியர் ஏ. வி. மயில்வாகனம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

வண்ணை பி. எஸ். ஆறுமுகம் பிள்ளை குழுவினரின் மங்கள இசையுடன் விழா ஆரம்பமாயிற்று.

பண்டிதர் எஸ். சிதம்பரப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார்.

'கலைமகள்' ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அனுப்பி வைத்த பாராட்டுப் பாவை வித்துவான் கிருஷ்ணபிள்ளை பாடினார்.

பேராசிரியர் வித்தியானந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''குரு.சிட மரபு வழிவந்த ஒரு அறிஞருக்கும் பல்கலைக் கழகம் இலக்கியக் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்துப் பெருமை பெறுகிறது.

மரபு வழி வந்த ஒரு அறிஞர் தம் சிந்தனை ஊற்றுக்களை நாமும் எதிர்கால சந்ததியும் படித்துப் பயன்பெறும் வகையில் சிந்தனைக் களஞ்சியம் என்ற இந்நூலின் வடிவில் கட்டுரை ஆக்கியுள்ளார். இந்நூலில் உள்ள கட்டுரைகள் யாவும் தமிழர் பாரம்பரியங்களைப் பற்றி அவர் தம் சிந்தனையில் மலந்தவையாகும் என்றார்.

இந்நூலின் முதற்பிரதியை பேராதனை வளாக மருத்துவப் பீடப் பேராசிரியர் அ. சின்னத்தம்பி பெற்றுக்கொண்டார்.

'இந்து சாதனம்' ஆசிரியர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தம் பாராட்டுரையில் கூறியதாவது: 'உலக மோதல்களிலிருந்து விடுபட்டு நல்லவர்களாக வாழ்வதற்கு நமக்கு வழிகாட்டியாக வாழ்கின்றார் பண்டிதமணிஐயா அவர்கள் அவர்தம் சிந்தனைகள் நம்மையும் உலக மோதல்களிலிருந்து விடுபட்டு நல்லவர்களாக வாழ வைக்கும் ஆற்றல்மிக்கவையாகும்'' என்றார்.

நாவலர் சபை செயலாளர் திரு. ம. ஸ்ரீகாந்தா கூறியது: குருசிட பரம்பரைக்கு ஐயா மூலம் தனிப்புகழ் இந்தநூற்றாண்டில் ஏற்பட்டுள்ளது. இலங்கைப்பல்கலைக்கழகம் இலக்கியக் கலாநிதிப்பட்டம் அளித்தமை பேருவகைதரத் தக்கது. அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக பண்டிதமணிஐயா பொருள் நலம் சொல்நயம் மூலமாகத் தமிழுக்கும் சைவத்துக்கும் பணியாற்றி வருவதோடு பலநூற்றுக்கணக்கான ஆசிரியமணிகளை உருவாக்கி இலங்கையில் மட்டுமின்றி கடல் கடந்த தமிழர் வாழும் இடங்களிலும் நற்பணியாற்றச் செய்துள்ளார்'' என்று கூறினார்.

திரு. ம. சற்குணம் கூறியதாவது இப்பாராட்டு விழா மூலம் தமிழ் இனம் எழுச்சி பெறுகின்றது. இதுவரை காலமும் தமிழ் இனம் உயிரோடு இருக்கும் பொழுது பாராட்டும் பெருவிழா எடுக்கவில்லை. எனவே பண்டிதமணிக்கு எடுக்கப்பட்டு உள்ள இப்பாராட்டு விழா மூலம் தமிழுலகம் புதிய நன்முயற்சியில் இறங்கியுள்ளது. இப் புதுவழக்கம் வளரட்டும். தமிழினத்தின் பெருமை வரலாற்றில் பண்டிதமணி போன்ற பலரால் நிலைநாட்டப்படட்டும் என்றார்,

பண்டிதை செல்வி தங்கம்பா அப்பாக்குட்டி கூறியதாவது இன்றைய உலகில் ஆசிரியர் மாணவர்உறவுமுறை புனிதத்துவம் இழந்து சீரழிந்து உள்ளது. இக்கால கட்டத்தில் குருமணிஐயாவுக்கு அவர் தம் மாணவர்கள் எடுத்துள்ள இப்பாராட்டு விழா இன்றைய மாணவர் உலகினுக்கு நல்ல எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. ஒப்பற்ற உத்தமர் அறிவில் கடல் போன்றவரும் தமிழுக்கும் சைவத்துககும் பணியாற்றுபவரும் தமிழ்சந்ததியினருக்கு ஒரு பெரும் ஆலவிருட்சமானவரும் ஆகிய பண்டிதமணி என்றும் நம்மிடையே அவர்வாழ்வார் என்று கூறினார்.

### பேராசிரியர் சதாசிவம் உரை

கொழும்பு வளாகத்தமிழ்துறை விரிவுரையாளர் பேராசிரியர் ஆ. சதாசிவம் தமது பாராட்டுரையில், மரவு வழிக் கல்விக்கும் இலங்கைத்தமிழ் மக்களுக்கும் அளிக்கப்பட்ட பெருமையே பண்டிதமணிக்கு இலங்கைப்பல்கலைக்கழகம் வழங்கிய இலக்கியக் கலாநிதிப்பட்டம் ஆறுமுகநாவலருக்கு நாவலர் பட்டம் கொடுத்து மதுரை திருவாடுதுறை ஆதீனம் புகழ்பெற்றது போல் பண்டிதமணிக்கு கலாநிதிப்பட்டம் கொடுத்து இலங்கைப் பல்கலைக்கழகம் புகழ் பெறுகின்றது'' என்றார்.

### இளைஞர் பெருமை

பேராதனை வளாக தத்துவத்துறை பேராசிரியர் வே. இராமகிருஷ்ணன் கூறியதாவது பண்டிதமணி '' இந்தக் காலத்தை ''அன்ன '' விசார காலம்'' என ஒருஇடத்தில் குறிப்பிட்டுள்ளார் இது எவ்வளவு தீர்க்கதரிசனமானது. அதாவது வயிற்றுப்பிழைப்புக்காக படிக்கும் காலமிதுவாகும் இன்றைய இளைஞர் உலகம் தமது இனத்துக்காக நாட்டுக்காகப் பாடுபடத் தயாரில்லை தமது பெருமையை உணரத்தலைப்படவில்லை அன்னிய நாடுகளுக்குச் சென்று சொகுசாகவாழ எந்தக்கூலிவேலையும் செய்யத் தயாராக உள்ளார்கள் இது ஒருஇனத்தின் அழிவுக்கு முதற்படியாகும் இதனைப் பெற்றோரும் ஏற்றுக்கொள்வது பெரும் அழிவுக்கு வித்திடும்.

பண்டிதமணி வெறுமனே இலக்கிய நயம் மிக்கவரல்லர் வர்லாற்றுக்கண்ணோட்டம் மிக்கவர் முதுபெரும் தீர்க்கதரிசியாவார் என்றார்.

ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் பேசுகையில்கூறியதாவது: ''அன்று ஆட்டிடையனை அகிலாண்டேஸ்வரி கவி காளிதாசனாக மாற்றினாள். முருகப்பெருமான் சாகத் துணிந்த அருணகிரியாரை மீட்டுத் திருப்புகழ்பாடவைத்

(7-ம் பக்கம் பார்க்க)

### 'யாழ். இந்து' இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இந்து இளைஞர் மன்றத்தின் வெளியீடான 'யாழ். இந்து' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று மாலை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறுகிறது. (அ)

முருகாவருக! திருமாலின் மருகாவருக! மயிலேறும் மன்னவருக! அடியார்கள் வாழ்வே வருக!

கலாஜோதி மில்ஸ்

51/10, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

முருகப்பெருமான் அகதிகளுக்கு அருளுகிறார்

சன்சோனி ஆணைக்குழுச் சாட்சியங்கள்

ஆவணிஅமளி-4

நான்காவது காதை வெளிவந்துள்ளது.

காந்தளகம்

213, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

என்: வைத்திலிங்கம் அன் கம்பனி லிமிட்.,

கொழும்பு - யாழ்ப்பாணம்

- "தோன்" முட்கம்பி, பித்தளை, இரும்பு மர ஸ்குறுகள் தயாரிப்பாளர்களும்
- கட்டிடப் பொருட்கள் இறக்குமதியாளர்களும்
- உல்லாசப்பயணிகள் உபசரிப்பாளர்களும், போக்குவரத்து வசதியளிப்பவர்களும்.

தொலைபேசி: கொழும்பு 33143/ 33144/ 33145. யாழ்ப்பாணம்: 530

வசந்தா ரெக்ஸ்ரயில்ஸ்

42, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்

எங்கள் ஆதரவாளர்கள், வாடிக்கைக்காரர்கள் வாழ்வில் வசந்தம் வீச நல்லைக்கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் சாறிகள் மற்றும் துணிவகைகளை பிறின்ரிங் செய்ய எங்களை நாடுங்கள்

நீண்டகால அனுபவம்! சிறந்த சேவை!!

பிறின்ரிங் ஓடர்கள் கீழ்க்கண்ட எங்கள்விற்பனவுநிலையத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும்

வசந்தா வஸ்திராலயம்

இல. 20, மேல்மாடி - மக்கள் நவீனசந்தை யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான அழகிய பவுண் நகைகள் தங்கப்பவுண் வைரங்கள் ஆகியவற்றுக்கு

கே. என். எம். மீரூன் சாஹிப்

தங்கப்பவுண் நகை மாளிகை

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

போன்: 585

மஞ்சத்தில் மயிலேறி விளையாடும் முருகா
வினைதீர்க்கும் வேலவனின் திருநாமம்
சொல்லி அருள் வேண்டி வணங்குவோம்......
வடஇலங்கையில் பெயர்பெற்ற நிறுவனம்
0 மாளிகைப் பொருட்கள்
பாலுணவுகள்
0 பாவனைப் பொருட்கள்
0 இறக்குமதி செய்யப்பட்ட டயர், ரியூப்புகள்
இன்னும் பல

எஸ். . முருகேசு

154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(போன்: 564)

தேடி வரும் அடியார் வினை திர்க்க
நாடி வரும் நல்லையம்பதி முருகன் துதி
பாடித் தொழுதிடுவீர்!

அமுதா நகைமாளிகை

உங்கள் ஓடர் நகைகளை குறித்த தவணையில்
சிறந்த முறையில் குறைந்த செலவில்
செய்விப்பதற்கு சிறந்த ஸ்தாபனம்.

அமுதா நகைமாளிகை

உரிமையாளர்;
க. கந்தையாபிள்ளை
தங்க, வைர, நகை வியாபாரிகள்
363, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

மஞ்சத்திலேறி மக்கள் துயர் தீர்க்க வரும்
மயில்வாகனனை
மனங்குளிரப் பாடிடுவோம்!

ஃ அபிஷேகச் சாமான்கள்
ஃ அத்திபாரச் சாமான்கள்
ஃ விவாக முகூர்த்தப் பொருட்கள்
மற்றும்
கோவில் தேவைகளுக்கான
சகல
மருந்துச் சாமான்களும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச் சரக்கு வியாபாரம்)
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 7135

மஞ்சமதி லமர்ந்து மக்கள் தமக்கே ஆறுதலை வழங்கும்
ஆறுதலை இருக்க அஞ்சுதலை நீக்குவாம்!

இத்திருநாளில் உங்கள் இதயம் கவர்ந்த
தங்க, வைர நகைகளைத் தெரிவுசெய்ய
மறவாதீர்கள்

பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்; 7499 தந்தி: 'வைரம்'

# சிந்தனை செய்வோம் திருமுருகா!

-- அரியாலையூர் வே. ஐயாத்துரை --

கங்கை மதிசடை பொங்கும் சிவசுத
கந்தா துதிநிறை காரணனே!
செங்கை வேலொடு எங்கும் பரந்து
தீவினை போக்கிடு திருமுருகா!

எங்கும் ஒளிமயம் எங்கும் எழில்நயம்
பொங்கும் புனிதமெய் பொலிவாகி
சங்கத் தமிழறி சைவப் பெருநெறி
தாங்கும் தலைமுறை தருவாயே!

தொழுவோ ருளமது தெளிவாய் மலரத்
துணையே புரிவாய் துதிமுருகா
எழுவாய் கலையுயர் இதமார் பதியில்
எழிலார் நல்லைக் கினியோனே!

நல்லைப் பதிநய நடனச் சிவமணி
நாயக மாகிய நம்முருகா
செல்வத் தலமுயர் சேவற் கொடியெழச்
சிந்தனை செய்வோம் திருமுருகா!

கொடியொடு கூடிய குணமிகு திருநாட்
சோலமெய்ப் பூங்கா வொடுநிறைய
வடிவுடை முருகா வழிபடு மடியவர்
வருகையில் நெறிமுறை வகைசெய்வாய்!

பொன்னகை போலும் பூவகை புனைந்து
பூவையர் பொருந்தி வருகைதர
முன்னருள் சுரந்து மொழிகுவை முருகா
மூவிரு முகமொளிர் முன்னவனே!

சைவப் பெருநெறி சாரத் தலைமுறை
தமிழர் நடையுடை தாங்கினராய்
தெய்வத் திருமணி திலகா வுன்பதி
சேரத் திருவருள் செய்முருகா!

சிவபொறி யாறித் திருமுக மாறுயர்
சேயுரு வாகித் திகழ்முருகா!
பவவினை மாறித் தவநெறி தேறப்
பக்திமை பரவுக பாவலனே!

நினைவுயர் நாதம் நிறைமணி நிகழ்த்த
நேசமெய்ப் போதம் தருமுருகா!
அவனைரும் பேதம் அற்றுய ரணியாய்
அகநிறை துதிசெய அருள்முருகா

யாழக மெனுமுயர் வாழக மாகிய
இசைதரு பெருநக ரிதமுருகா!
வேளக மெனுமுயர் விதிநிறை பதியில்
விளைமணி யாகிய வேல்முருகா!

அகநிறை குகனே வகைநிறை பவனிக்
கழகிய ரதமுயர் அருள்முருகா!
தகவுயர் நல்லைத் தலமுயர் பதியை
தமிழருக் கிதமே தருமுருகா!

தமிழர் தலைவன் சங்கிலி மன்னன்
சபைநிறை வாகிய தலைவாயில்
அமையும் யமுனு ஏரியும் மின்னும்
அதிபுக ழாதிசொல் அருள்முருகா!

இகமும் பரமும் இங்கென இயம்ப
எழிலார் நல்லைப் பதிமுருகா!
அகமும் புறமும் தூய்மைய தாக
அடியவர் வருவோம் அருள்முருகா!

பகையும் பழியும் பயமும் துயரும்
பரவா திருக்கப் பார்முருகா!
புகையும் கொடுமைப் புன்மைகள் மடியப்
புனர்வழி செய்குக பூரணனே!

வேலும் மயிலும் துணையென வேண்டி
விளிக்கின் றேமே வேல்முருகா!
சீலம் செறிந்த சேவற் கொடிநிறை
செந்தமி ழர்துயர் தீராயோ!

காலம் காலம் தமிழர் கலங்கிக்
கண்ணீர்க் கடலில் நீந்துகிறர்
மேலும் மேலும் துயர்தொட ராது
மீளும் வகைசெய் வேல்முருகா!

## நல்லை முருகன்

# நல்லை பக்தி

நல்லூர்க் கந்தசுவாமி கோவில்மஹோற்சவம் மிகவும் சிறப்பாக நடந்து வருகிறது. கோவில் அலங்காரம், கண்ணைக்கவரும் வாகனதிகள், நியதி தவருத பூசைகள், இனிய மங்கள வாத்தியஇசை, சங்கீத கதாப்பிரசங்கம் முதலியன பக்தி பெருக்கத்தை ஊக்குவிக்கும் சாதனங்கள். திருவிழாக் காலமாதலால் பெரும்திரளான மக்கள் கூட்டம் தினமும் சாயங்காலம் ஐந்து மணியளவில் நல்லையம் பதியில் கூடி விடுகிறது. நல்லூரில், வைரவ கோவில் முன்றல் ஒரு தனித்தெய்வீகமுள்ள இடம். அங்கே பரமாச்சாரிய சுவாமிகளின் சங்கீத உபந்யாசம் அநேக அடியார்களை கவர்ந்தபடியால் உட்கோவிலில் நெரிசல் குறைவு. வைரவகோவில் முன்றலில் நடக்கும் சங்கீத உபந்யாசத்தைப்போல தீர்த்தக்கேணி மண்டபத்திலேயுமிருந்து முருகன் புகழ் பாடக்கூடியவர்கள், முக்கியமாகச் சங்கீதப் பள்ளி மாணவ மாணவிகள், திருப்புகழ், முருகன்பிள்ளைத்தமிழ் முதலியவற்றை பிற்பகல் 4 மணி தொடக்கம் ஒலிபரப்பி மூலம் பாடினால் அநேக அடியார்கள் இப்பாடல்களை ரசித்துக் கேட்டு கூட்டம் பரவலாயிருக்கும். நல்லூர் முருகன் சந்நிதியில் அவன்புகழ்பாடி, கோவிலுக்கு வருமடியார்களுக்கு பக்திஉணர்ச்சியை ஊட்டுவது ஒரு சிவதருமச்செயல். இராமநாதன் சங்கீதக்கல்லூரி போன்ற இசை நிறுவனங்களும் வேறு தனி சங்கீத நிறுவனங் இந்த நற்பணிக்கு வேண்டும். தினமு கல்லூரியோ அல்லது ச தேர்ச்சி பெற்ற தனி குழுவோ, நல்லூர் அ லரின் அனுமதியுடன் புகழ்பாடும் இம் யான பணியை மு செயலாற்றினால் பயனுண்டு.

பழநியில் பங்குனிப் விழாவின்போது பத் களிலும் சமயத்து பாண்டித்தியம் பெற்ற பொழிவாளர்கள், க பேராசிரியர்கள், தமிழ சிறந்த இன்னிசையா நாதஸ்வரக்கலைஞர்கள் யோரால் சமயப்பேரு இன்னிசைக் கச்சே மற்றும் கலைநிக போன்றவைகளும் பெறும். பல்லாயிர கான மக்கள் இ கேட்டு இன்புறுவர். எங்கள் நல்லைக்கந்தன் சவ நாட்களில் ந மிக்க பயனுமையும். பெருமான்காலத்தில்ந

மயிலேறும் மன்னுவருக!

கந்தரனுபூதி ஒரு மந்திர நூல்
ஆராவமுதனைய பாராயண நூல்
இதனை நாள்தோறும் உளங்கனிந்து ஓதுவோர்
இகபர நலன்களை எளிதிற்பெறுவர்.

10 மில்க்வைற் நீலசோப்
அல்லது 2 பார்சோப்
மேலுறைகளை அனுப்பிக்
கந்தர் அநுபூதி
நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்




இலங்கையில்
முதன் முதல் நீலங்கலந்த
சோப் தயாரித்தவர்

மில்க்வைற் ஸ்தாபனத்தார்

நுரைவளம் மிக்க நீலசோப் இரண்டுவ
நன்மை தருகிறது
0 அழுக்கை நீக்குகிறது
0 நீலம் போடும் வேலையை நீக்குகி

குறிப்பு; மூலப் பொருள்கள் விலையேற்றம், காகித ஏற்றம் — இருந்தும் நாங்கள் சோப் விலை கூட்ட வில்லை.

விலை சதம் 60 மட்டுமே!

மில்க்வைற் சவர்க்கார தொழிலகம்
காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாண
கிளை: 79, மெசென்ஜர் வீதி, கொழு

வலிந்து வழிபடும் அடியவர்க்கு
வலிய வந்தருளும் நல்லைக்
குமரன் அருள்பாலிப்பாராக!

மஞ்சத்தில்உன் அழகு முருகனின்
திருக்கோலம் காணும் பக்தர்களுக்கு
பலகோடி வரம் தா முருகா!



சி. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் -- போன்: 284.

மஞ்சரதமேறி வந்தே வள்ளி தேவயானையுடன்
அஞ்சாதே யென்றே அபயமருள் வேல்முருகா -- நினைத்
தஞ்சமென் வந்தே தரிசிக்கும் அடியவரின்
நெஞ்சத் துயரை நீக்குவாய்!

∵ கவர்ச்சியான இழை
∵ சொகுசான ஓட்டம்
∵ நீடிய பாவனை
∵ உத்தரவாதமுள்ள வேலைப்பா

ஆகியவற்றிற்கு உங்கள் தேய்ந்துபோன டயர்களை எம்மிடம் புதுப்பியுங்

நோர்தேண் இன்டஸ்ரீ
8/1, ஸ்ரான்லி றேட், (போன்: 7158) யாழ்ப்பாண

முருகன் மஞ்சத்திருவிழா சிறப்புமலர்

# நல்லை உற்சவநாட்களில் பக்திச்சூழலை அதிகரிக்க...

-- முருகனடியான் --

வேறு தனியார் நிறுவனங்களும் ...ற்பணிக்கு முன்வர ...ம். தினமும் ஒரு ...ரியோ அல்லது சங்கீதத் ... பெற்ற தனிநபரோ, ...ா, நல்லூர் அறங்காவ ...அனுமதியுடன் முருகன் ...டும் இம்மேன்மை ...பணியை முன்வந்து ...ாற்றினுல் பெரும் ...ண்டு.

...யில் பங்குனிப் பெரு ...ன்போது பத்துநாட் ... சமயத்துறையில் ...த்தியம் பெற்ற சொற் ...வாளர்கள், கல்லூரிப் ...ரியர்கள், தமிழகத்தின் இன்னிசையாளர்கள், ...வரக்கலைஞர்கள் முதலி ...ல் சமயப்பேருரைகளும் ...சைக் கச்சேரிகளும் கலைநிகழ்ச்சிகள் ...றவைகளும் நடை... பல்லாயிரக்கணக் ...மக்கள் இவைகளைக் இன்புறுவர். இப்படி நல்லைக்கந்தன் மகோற் ...ட்களில் நடந்தால் ...யனுயமையும். நாவலர் ...ான்காலத்தில்நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் கந்த புராண படனம் நடந்ததாம். இலக்கிய இரசனையே உருவான வித்துவசிரோன்மணி பொன்னம்பலம்பிள்ளை வாசிக்க, நாவலர் பெருமான் பயன் சொன்னுராம். அக்காலத்தில் நடந்த திருவிழாக்களின்போது சுவாமிக்குப் பின்னுல் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களை பாடுவதற்கும் பஜனை செய்வதற்கும் திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார்களை நாவலர் பெருமான் அழைத்தாராம். மக்களிடையே கடவுட் பக்தியை பரப்ப நாவலர் பெருமான் செய்த தொண்டுகள் இவை. இதை நாமும் பின்பற்றலாம் இப்படிப்பட்ட ஞானமும் கல்வியும் மேம்பட்ட பெரியோர்கள் ஈடுபட்ட கைங்கரியத்தில் இப்போது சங்கீதத் துறையில் உள்ளவர் ஏன் ஈடுபடமுடியாது?

முருகப்பெருமானைப் பாடிப் பரவுதல் பற்றி ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் அவர்கள், பழநி ஸ்ரீதண்டாயுதபாணி ஸ்வாமி தேவஸ்தானக் கும்பாபிஷேக வெளியீடான 'முருகன் பாமாலைத் திரட்டுக்கு' எழுதிய முகவுரையில் சொல்லியிருப்பதைப் பார்ப்போம்: ''பாருக்குள்ளே கலியுகத்திலே கண்கண்ட பரமதெய்வம் அறுமுக 'சிவனுர்' ஆவர். அவரைப் பாடிப் பரவுதல் கலி, பலிகெடுவதற்குரிய சிறந்தசாதனமாம். அப்பரமனைக் குறித்தெழுந்த பாட்டுகள், அப்பெருமானது எண்ணிறந்த பராக்கிரம செயல்களையும், அவரது முழுமுதல் தன்மையும், அவரது குண மகிமைகளையும் அவரைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுவார்க்கு, அவர் எளியராய் வந்து, நோய், வறுமை இன்னேரன்னவற்றை நீக்கி, ஆயுள், கல்வி, தெய்வம், நன்மனை, நன்மக்கட்பேறு முதலிய இம்மைப் பயன்களையும், அருள்ஞானப் பேருகிய மறுமைப் பயனையும் அளித்தருளும் பெற்றிவாய்ந்தவை''

இப்பெரியாரின் கருத்தை ஆதரித்து முருகன் புகழ்பாடுவதற்குப் பாடக்கூடியவர்கள் முன்வருவார்களாக.


...ஞவருக!

...நூல்

... நூல்

...ந்து ஓதுவோர் ...ற்பெறுவர்.




...னத்தார்

...ப் இரண்டுவித ...து

...யை நீக்குகிறது

...ற்றம், காகித விலை ...ள் சோப் விலையைக்

...ட்டுமே!

...ர்க்காரத் ...கம்

யாழ்ப்பாணம்.

கொழும்பு.

-- நினைத்

...வேலைப்பாடு

... புதுப்பியுங்கள்

...ஸ்ரீஸ்

...ாழ்ப்பாணம்.

நல்லூர் கந்தனுக்கு அரோகரா!

0 விவசாய மருந்து வகைகள்

0 கோழித்தீன் வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

(போலி கோழித்தீன் வகைகளை வாங்கி ஏமாறுதீர்கள்)

லிங்கம் ஸ்ரோர்ஸ்

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி: 7576)

நல்லூர்க்கந்தன் அருளால் எல்லோரும் இன்புற்றிருக்க

விஞயகர் ஸ்ரோர்ஸ்

குறைந்த விலையில் சிறந்த பொருட்களுக்கு

விஞயகர் ஸ்ரோர்ஸ்

மொத்தமாகவும், சில்லறையாகவும், சிறந்த பொருட்களை வாங்க இன்றே விஜயம் செய்யுங்கள்

விஞயகர் ஸ்ரோர்ஸ்

166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7787

நல்லை முருகன் அருள் எல்லார்க்கும் கிட்டுக!

விவசாயப் பெருமக்களே !

வியாபாரிகளே !!

உள்ளூர் விளைபொருட்களான மிளகாய், வெங்காயம், கிழங்கு மற்றும் உபஉணவுப்பொருட்களை கமிஷன் அடிப்படையில் கூடிய விலையாக விற்பனை செய்து தருவோம். இலகுவான வசதியும் ஆலோசனையும் பெற்று வளமான முன்னேற்றம் பெற உதவி புரிவோம். திருப்திகரமான சேவையும், தகுந்த ஆதரவும் உண்டு.

ஸ்ரீ திருப்பதி ஏஜன்ஸி

130, நாலாம் குறுக்குத் தெரு -- கொழும்பு-11.

தொலைபேசி இல: 29676.

கிளை ஸ்தாபனம்:

ஸ்ரீ திருப்பதி ஏஜன்ஸி

51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 7119

நல்லையம்பதியில் மஞ்சத்தில் பவனிவரும்நன்னுளில் பக்தர்கள் அருள்பெற வேண்டுகிறோம்.

வேரோடு அசுரர் குலம்
மாய்ந்து தேவர்
வேதனைகள் தீய்ந்த
வெனில் கந்தவேளை
சீரோடு வேண்டுகிறோம்
செந்தமிழர் எம்குறை
போக்கிடுவீர் - முருகா.



PEC

புறே மோட்டர்ஸ்

என்ஜினியரிங் கொம்பனி லிமிட்.,

844, பருத்தித்துறை வீதி - நல்லூர் - யாழ்ப்பாணம்.

மஞ்சமமர் கந்தன் தஞ்சமென வந்த அடியாரின் வினை தீர்ப்பான்!

யாழ். நகரில் ஆடை அணிகளின் நாயகன்!

தரத்தில், பாவனையில் சிறந்த சகல

ஜவுளிகளுக்கு சிறந்த ஸ்தாபனங்கள்

லிங்கம் சில்க் ஹவுஸ்

18, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

14, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

முருகன் திருவருள் எங்கும் பொலிக

தரமான தங்க, வைர நகைகளுக்கு

விஜயம் செய்யுங்கள்

கே. கே. வி.

யாழ்ப்பாணம் நகைமாளிகை

82/4, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 362

ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

K. K. V. Jaffna Jewel House

82/4, Kasturiar Road, — JAFFNA

Phone : 362

நல்லையம்பதி வாழும் வேல் முருகா!

மஞ்சமதில் ஏறி வந்தே வரமளிப்பாய்!!




ஃ யாழ். மெற்றல் உற்பத்திப் பொருட்களான

அலுமினிய, பித்தளைப் பாத்திரங்கள்

ஃ லேக்கவுஸ் பத்திரிகைகள் தென்னை அபிவிருத்திச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட

பசளை விற்பனையாளர்கள்

யாழ்மெற்றல்

விற்பனை நிலையம்

Yarl Metal Sales Centre

6, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

போன் : 7596

" விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்று
மொழிக்குத் துணைமுரு காவெனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத்துணை அவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே "

—கந்தர் அலங்காரம்

மஞ்சத்தில் பவனிவரும்

# நல்லூர்க் கந்தன் அருள்பெற

வந்த அடியார்களுக்கொரு நற்செய்தி !

தரமான
உணவு வகைகளைத்
தயாரிக்க
என்றும் மறவாதீர்கள்
சி. எஸ். கே.
வெள்ளை
தேங்காய்
எண்ணெய்



உங்கள் கால்நடைகளுக்கு
சி. எஸ். கே.
பிண்ணாக்கு
மறவாதீர்கள்
சி. எஸ். கே.
பிண்ணாக்கு
சி. எஸ். கே.
பிண்ணாக்கு

# சி. எஸ். கே.

# கந்தையா செட்டியார்

# ஸ்தாபனம்

## யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 646

20-ம் திகதிவரை
**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
**அன்புச் சகோதரர்கள்**

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
**NOT NOW COMRADE**

**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சிவாஜி - கே. ஆர். விஜயா
**ராமன் எத்தனை ராமனடி**

**REGAL** Jaffna
Daily 10-30 a. m., 2-00, 4-30, 7-00, & 9-30 p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
**THE CASSANDRA CROSSING**
All passes and Concessions Suspended

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
**பேரும் புகழும்**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
கடைசி வாரம் நடித்த
**மன்மத லீலை**
(ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சாவித்திரி
வீரப்பா - எம். என். ராஜம் - சந்திரபாபு
நடித்த
**ம கா தே வி** [புத்தம் புதிய பிரதி]

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞயிறு 4 காட்சிகள்
**சொல்லத்தான் நினைக்கிறேன்**
22-8-78 முதல் வளர்பிறை

**லிடோ** (யாழ்.ந
போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
**தீர்க்க சுமங்கலி**

**சாந்தி** யாழ்நகர். போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45 காட்சிகள்
நல்லூர்க்கந்தன் புகழ்பாடும்!
4-வது கடைசி வாரம்!!
ரகுநாதன்... குமுதினி ...சந்திரகலா... தனரத்தினம்
நடிக்கும்
**தெய்வம் தந்த வீடு** (சினிமாஸ் கோப்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி - தேவிகா
நடித்த
**ஆடிப்பெருக்கு**
(புதியபிரதி)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

## பனையிலிருந்து வீழ்ந்துமரணம்

(மாவிட்டபுரம்)

பனையிலிருந்து தவறிவீழ்ந்த சீவல் தொழிலாளி ஒருவர் பரிதாபகரமாக மரணத்தை தழுவினுர்.

வீமன்காமத்தைச் சேர்ந்த வேலன் சின்னத்தம்பி என்பவரே இவ்வாறு மரணமான வராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை செய்த சமயம் சீவல் தொழிலாளியான காலமானவர்வழக்கம் போல் கள்ளிறக்கச் சென்று பனையொன்றில் ஏறியசமயம் தவறி வீழ்ந்ததாகவும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமுன் வாயாலும் மூக்காலும் இரத்தம் வழிந்த நிலையில் அவர் மரணத்தை தழுவிக் கொண்டதாகவும் சாட்சியங்கள் தெரிவித்தன. விபத்து மரணம்என தீர்ப்பு வழங்கப் பட்டது. (உ)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஆயுர்வேத டாக்டர் வைத்தியமணி பே. பிலிப்ஸ் சமாதான நீதவானுக நியமனம் பெற்றதையிட்டு அவருக்கு மட்டுவில் மகாவித்தியாலய மண்டபத்தில் இன்று சட்டத்தரணி திரு. எஸ். கே. திரவியநாயகம் தலைமையில் பாராட்டு விழா ஒன்றுநடைபெறுகிறது. (இ)

## இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 2-ந் திகதி
வெள்ளிக்கிழமை
(18-8-78)

**மேடம்:-** தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும் புண்ணிய ஸ்தலயாத்திரையொன்றும் மேற்கொள்ளப் படலாம். உடல்நிலையில் முன்னேற்றம் தென்படும் உட்சாகமான தினம்.

**இடபம்:-** வரவேற்கவேண்டிய சம்பவங்கள் இடம் பெறும். புத்திரர்களால் பெரு மகிழ்ச்சிக்கு இடமுண்டு உள்ளத்தில் உவகை துள்ளும்.

**மிதுனம்:-** அன்னியர் வாசம் அமைதிக்கு உலைவைக்கும். அபாயகரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளவும். தெய்வ நம்பிக்கை சிறந்த பயன்தரும்.

**கடகம்:-** குடும்பத்தில் குதூகலம் தவழும். பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவதற்கிடமுண்டு. தொழில் துறையிலும் முன்னேற்றம் தென்படலாம்.

**சிங்கம்:-** அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். சிலர் வாழ்க்கையில் பொருள் முடையும் ஏற்படலாம். நண்யர்களால் தொல்லைகள் தோன்றக்கூடும். திட்டமிட்டுச் செயலாற்றவும்.

**கன்னி:-** பரம் பொருளின் அருளுக்கு இடமுண்டு, பரோபகாரச்சிந்தை தலைதூக்கும். பொதுப்பணிகளில் ஈடுபடுபவர்கள் பொது மக்களின் ஆதரவைப் பெறுவர். அந்தஸ்திலும் முன்னேற்றமுண்டு.

**துலாம்:-** திட்டமிட்டப் படியே. வாழ்க்கை நடக்கும். புதிய உறவுமுறைகளுக்கும் இடமுண்டு. உத்தியோக ரீதியாக வெளிநாடு செல்லும் வாய்ப்பும் சிலருக்குக் கிடைக்கலாம். பயனுள்ளதினம்.

**விருச்சிகம்:-** சந்தர்ப்பத்திற் கேற்றவண்ணம் பொருள் தாராளமாகக்கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் அதிஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு. மேலிடத்தின்வாழ்த்தும்கிடைக்கக் கூடும்.

**தனுசு:** சிந்தனையில் தடுமாற்றம் தென்படும். நண்பர் ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். தொழில் துறையில் மறைமுக எதிர்ப்புகளுக்கும் இடமுண்டு. முன்யோசனையுடன் நடக்கவும்.

**மகரம்:-** ஏமாற்று வேலைகள் இடம் பெறும். வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். குடும்பத்தில் அமைதி குன்றும். நன்ருக ஆலோசித்த தின்பின்பே எந்த நடவடிக்கையையும் எடுக்கவும்.

**கும்பம்:-** பூமியால் அதிக லாபம் கிடைப்பதற்கு இடமுண்டு. விவசாயிகள் வாழ்க்கையில் நல்லமாறுதல் ஏற்படும். மணவாழ்க்கையில் நண்மையான மாற்றங்கள் உருவாகும் அமைதிதரும் தினம்.

**மீனம்:-** அன்னியர் வாழ்க்கையில் குறுகிடுவார்கள். தனிவழிப்பயணம் ஆபத்தைத் தரக்கூடும். இன்று கொடுக்கல் வாங்கல்களைத் தவிர்த்துக் கொள்ளவும். சகோதர வழியாலும் சஞ்சலமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## ரஷ்யா செல்வார்

(உடுப்பிட்டி)

ஸ்ரீலங்கா சுதந்திரதொழிற் சங்க சம்மேளனத்தின் வட பிரதேச அமைப்பாளரான திரு. நல். கணேசன் சோவியத்யூனியன் தொழிற்சங்க சம்மேளனத்தின் விசேட அழைப்பின் பேரில் சோவியத் பயணமாகவிருக்கின்றுர்.

இவர் அங்கு மூன்றுமாத காலம் தங்கியிருந்து தொழிற் சங்க அமைப்பு முறைகள் பற்றி அறிந்து கொள்ளுவார். (உ)

## வரலாற்று...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தார். அதேபோன்று கலாநிதி பண்டிதமணியவர்கள் திரு நெல்வேலி ஆசிரியர் கலாசாலைக்குள் ஒன்றும் தெரியாது பிரவேசித்த என்னைப்போன்ற பல்லாயிரவர்களைச் சிறந்த சமயப் பிரசாரகர்களாகவும் இலக்கிய மேதைகளாகவும் மாற்றி இலங்கையில் நாவலர் காட்டிய நெறியில் கந்த புராண கலாசாரத்தைப் பரவச்செய்தார். நாட்டை இவர்களால் மிளிரவைத்தார் இவர் ஆயிரம் பிறைகண்டு 80வது பிறந்ததினத்தை அடைந்த இன்றும் பல சமய நூல்களை எழுதியும் இலக்கிய புத்தகங்களையாத்தும் பெரும்தொண்டு புரிந்துவருகின்றுர்.

இவர் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்தசேவை என்றும் தமிழர் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பாராட்டப் பட்டுவரும் இவர் மகாலிங்கமும், உரையாசிரியர் வேற்பிள்ளை, குமாரசாமிப் புலவர் போன்ற தமிழ் மேதைகளின் அறிவையும் 'லோட்மெனிசன்' ஷேக்ஸ்பியர், ஷெல்லி, கீற்ஸ், யோன்ஸ்சன் போன்ற மேனுட்டறிஞர்களின் நூலறிவை நன்கு அறிந்து இவற்றை எல்லாம் திரட்டி இக்காலத்திற் கேற்றவகையில் ஒரு புதிய யுக்தியைக்கையாண்டு பிற மொழி வித்தகர்களும் கண்டு வியக்கத்தக்க வகையில் இன்றும் சேவை புரிந்துவருகின்றுர்.'' (உ)

## ரமலான் சிந்தனைகள்

அருமைநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக, ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு அமர் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது;

''குர் ஆனும் நோன்பும் (கியாமத்நாளில் அல்லாஹ்த ஆலாவிடம்)அடியானுக்காக மன்ருடும் நோன்பானது 'இரட்சகா! மெய்யாக நான் இம்மனிதனை பகல் நேரத்தில் ஊண்குடிப்பை விட்டும் மனோ இச்சையை நிறைவேற்றுவதை விட்டும் தடுத்துவைத்திருந்தேன். ஆதலால் இவனுக்காக எனது சிபாரிசை நீ ஏற்றுக்கொள்வாயாக!'' என்று மன்ருடும். குர்ஆனுனது 'இரட்சகா; நான் இம் மனிதனை இரவில் தூக்கத்தை விட்டும் தடுத்து வைத்திருந்தேன். ஆதலால் இவனுக்காக எனது சிபாரிசை ஏற்றுக்கொள்வாயாக! என்று மன்ருடும். அப்பொழுது அவை இரண்டின் மன்ருட்டங்களும் ஏற்றுக்கொள்ளப் படும்:- (மிஷ்காத் - பக்கம் 173)

தொகுப்பு:
ஏ.சி.எம். மஸ்ஹூர்
யாழ்நகர்.

## பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

மலேஷியாவுக்குச் சென்று பண்ணிசைக்கச்சேரிகள் செய்து பாராட்டுப் பெற்றுத் திரும்பியுள்ள பண்ணிசைச் செல்வன் திரு. எஸ். ஆர், திருஞானசம்பந்தனுக்கு மீசாலை பக்திநெறி கழகத்தினர் இன்று மீசாலை சப்பைச்சிமாவடி விநாயகர் ஆலயத்தில் பாராட்டுவிழா வொன்றை நடாத்தவுள்ளனர்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில்
திருவிழாவை முன்னிட்டு
**வைமன் இந்து இளைஞர் இயக்கம்**
நடாத்தும்
**10-வது சைவசமய அறிவுப் போட்டி**
எமது அங்கத்தவர்களைத் தவிர
மற்ற எவரும் பங்குபற்றலாம்
**விடைகள் 28-8-78-க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்**

1. பிரஸ்தானத் திரயம் என்பது என்ன? அது இந்து மதத்தில் வகிக்கும் முக்கியத்துவம் என்ன?
2. முருகனுக்கும், ஸ்கந்தனுக்கும் உள்ள வேறுபாடு யாது?
3. வள்ளியினது தாய் தந்தையர் யார்? அவர்கள் என்னவாக அவதாரம் எடுத்தனர்? அவதாரத்தில் தந்தையாரது பெயர் என்ன?
4. சக்திபற்றிய நூல்களுள் சிறந்ததாகக் கொள்ளப்படுவதெது? அதைப் பாடியவர் யார்?
5. சிவபிரானையும், பூசணிக்காயையும் சிலேடையாகப் பாடிய புலவர் யார்? அவர் எது பாடுவதில் சிறந்தவர்?
6. திகடசக்கரம் என்பதன் பொருள் என்ன?
7. கேது, இராகு வணங்கிய ஈழத்தலம் எது?
8. நரசிங்கம், விசுவகனம் என்பவை என்ன? அவை மொத்தம் எத்தனை?
9. அகத்தியர் உண்ட அரக்கன் பெயர் என்ன? அவன் சகோதரன் பெயர் என்ன?
10. முருகன் வேங்கைமரமாகவும், கிழவனுகவும் வந்தது பெண்ணுடன் சம்பந்தப்பட்ட தத்துவத்தை விளக்குகிறது. தத்துவத்தை விளக்கவும்.
11. ''தொடுக்கும் கடவுட் பழம் பாடல் தொடையின்'' பயன் யார்? அப்பயனைப் பாடியவர் யார்?
12. பெண்ணையும், ஆன்மாவையும், திருவருளையும் தொடர்புபடுத்தியவர் யார்? அவர் பாடிய புராணம் எது?
13. சாக்த ஆகமங்கள் எப்பெயரில் அழைக்கப்படுகின்றன?
14. வேதம், தமிழ் வேதம், ஐந்தாம் வேதம், வேதசிரசு இவை ஒவ்வொன்றும் எவை எவை?
15. விமானத்திற்கும், ஆலயத்திற்கும் என்ன சம்பந்தம்? அது இல்லாத ஈழத்தின் புகழ்பெற்ற ஒரு ஆலயம் எது?

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:
செயலாளர், வைமன் இந்து இளைஞர் இயக்கம்
3, வைமன் வீதி, யாழ்ப்பாணம்,

# உள்ளூர் கலைஞரை வளர்க்க யாழ். மாநகரசபை திட்டம்!

## பௌர்ணமி கலைவிழாவில் விசேட ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

''யாழ் மாநகரசபை தமிழ்க் கலைஞர்களுக்கிடையிலான கலைத்துறைப் போட்டி ஒன்றினை ஆண்டுதோறும் நடாத்தி சிறந்த கலைஞர்களைத் தெரிவுசெய்து பரிசளித்து உள்ளூர்க் கலைஞர்களின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க உத்தேசித்துள்ளது'' என்று யாழ், திறந்தவெளி அரங்கில் நீண்டகால இடைவெளிக்குப்பின் மீண்டும் யாழ் மாநகர சபையினரால் நடத்தப்பட்ட பௌர்ணமி விழாவில் யாழ். மாநகரசபையின் விசேட ஆணையாளர் திரு. க. சிவஞானம் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் பிொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

கடந்த 5 ஆண்டுகால இடைவெளிக்குப் பின் மீண்டும் இவ்வரங்கினை அமைத்த நோக்கம் நிறைவுபெறுகின்றது, ஒவ்வொரு மாதமும் போயா தினத்தில் பௌர்ணமி விழா நடைபெறும். இதை எதிர் காலத்தில் பொறுப்பேற்கும் நிர்வாகசபையும் செய்வதற்கான வழிகளை மேற்கொண்டுள்ளேன். சிறப்பாக இவ்விழாவில் உள்ளூர்க் கலைஞர்களுக்கே இடமளிக்கப்படும்.

இக்கலைஞர்களுக்கு ஒவ்வொரு ஆண்டிலும் கலைப் போட்டியொன்றினை நடாத்தி சிறந்த கலைஞர்களைத் தெரிவு செய்யும் திட்டமும் உள்ளது இதற்கென ஒருவிசேடகுழுவை யாழ். மாநகரசபையில் நிறுவியுள்ளேன் என்றும் கூறினார்.

### அரசாங்க அதிபர் உரை

மேற்படி விழாவுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோவும், அவரது பாரியாரும், சிங்கள நாடக, திரைப்படக் கலைஞருமான திருமதி லயனல் பெர்ணண்டோவும் கலந்துகொண்டனர். நல்லூர் பி. எஸ். பிச்சையப்பா குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பித்த விழாவை அரசாங்க அதிபர் குத்துவிளக்கேற்றிவைத்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

'கலைரசனை' திறமான கலைஞர்களாலும் தரமான ரசிகர்களாலும் வளர்ச்சியடைவதாகும். இவ்விரு வழிகளை இணைத்து சிறந்த நிர்வாகியான யாழ். விசேட ஆணையாளர் க, சிவஞானம் கலை வளர்ச்சிக்கும் உதவிசெய்துள்ளமையை நான் பாராட்டுகின்றேன். இத்தகைய ஒரு சிறந்த அரங்கினை மீண்டும்விசேட ஆணையாளர் மேற்கொண்டுள்ள கலைவளர்ச்சிக்கு நானும் எனது சக ஊழியர்களும் ஒத்துழைப்போம்''

### வி. பி. பேச்சு

இவ்விழாவில் செந்தமிழர் இயக்க பொதுச்செயலாளர் திரு. வி. பொன்னம்பலம்பேசுகையில் கூறியதாவது:-

''உலகில் தமது உரிமைக்காகப் போராடும் எந்த ஒரு இனமும் தமது உரிமைப் போராட்டத்தோடு தமது கலை, கலாச்சாரப் பாரம்பரியத்தினையும் பேணிவளர்த்து வந்துள்ளன, வளர்த்தும் வருகின்றன. இவ்வழியில் நாமும் நமது உரிமைப்போராட்டத்தோடு நமது ஈழத்து வரலாற்றுத் தொன்மையும், தனித்துவமும் மிக்க தமிழ் கலை, கலாச்சார பாரம்பரியத்தையும் வளர்க்கவேண்டும். அப்பொழுதுதான் எமதுஉரிமைப் போராட்டம் முழுமைபெறும். தமிழகத்தின் தமிழ்க்கலை, கலாச்சார வளர்ச்சியின் மாறுதல்களில் ஈழத்தவர் பங்கு கொண்டமைக்கு ஈழத்துப் பூதத்தேவனார் குறிப்பிடத்தக்கவராகும். அதுபோல் தமிழ்நாடக மறுமலர்ச்சிக்கும் ஈழத்தவர் பங்குஆற்றியுள்ளனர். 1947ல்யாழ், கலாநாடக மன்றத்தை ஆசிரியர் திரு. கனகய்யா ஆரம்பித்தார். இவரை ஈழத்து நாடக பிதா கலையரசு சொர்ணலிங்கம் தமது சிடராக்கிக் கொண்டுள்ளார். இவரால் ஆரம்பிக்கப்பட்ட நாடக மன்றத்தின் ஆண்டு விழவுக்காக உருவாக்கப்பட்ட 'அடங்காப்பிடாரி' நாடகம் இன்று ஈழத்தில் 1000 தடவையாக மேடையேறுகின்றது என்ருர்.

திரு. வி. பொன்னம்பலம் நாடக ஆசிரியர் திரு. கனகய்யாவுக்கு ''நாடக மாமணி'' என்னும் பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தார்.

மேற்படி விழாவில் யாழ். கலைமன்றத்தாரின் அடங்காப் பிடாரி நாடகமும், யாழ். மாநகரசபை ஊழியர் திரு. கிறேகறியின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன, பெருந்திரளான மக்கள் இவ்விழாவிற்கு வருகை தந்திருந்தனர். (ஊ-உ)

## நாளை வெளிவரும்

இடமின்மை காரணமாக 'அமிரின்' ஆட்சிமன்ற பேச்சுத் தொடர் இன்று இடம் பெறவில்லை. நாளை வெளிவரும்.

ஃ ஃ ஃ

வெள்ளிவிருந்தான பண்ணிசைக்கலாநிதி எழுதும் ''திருமுறைப்பண்ணிசைத் திறனாய்வுத் தத்துவம்'' தொடர்கட்டுரை அடுத்த வெள்ளி இதழில் வெளிவரும். (ஆ-ர்)

## கொடிகாமத்தில் நாளை நாடக விழா

(யாழ்ப்பாணம்)

வானொலி, திரைப்பட நடிகர்களின் மாபெரும் நாடக விழா நாளை கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய அரங்கில் நடைபெறவிருக்கிறது.

சட்டத்தரணி வ. செல்லத்தம்பி தலைமையில் நடக்கும் இவ்விழாவை வடமாநில வித்தியாபதி திரு. தி. மாணிக்கவாசகர் ஆரம்பித்துவைப்பார். பருத்தித்துறை நீதிபதி திரு க. ஞானச்சந்திரன் ஆசியுரை வழங்குவார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர் திரு. எம் சிவசிதம்பரம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம், உதவி பொலிஸ் அதிபர் திரு. ரி.ஈ. ஆனந்தராசா, ஈழநாடு ஆசிரியர் திரு. எஸ். எம். கோபாலரத்தினம், மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா, கல்கிபீடி அதிபர் திரு. சி. சின்னத்துரை, அண்ணா கோப்பி அதிபர் திரு. எஸ்.பி. நடராசா, வி. எம், கே. ஆபரண மாளிகை அதிபர் திரு. வி. எம். கணபதிப்பிள்ளை, திரு. கே. குலசேகரம்பிள்ளை ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள்.

பொம்மைகள், சிற்பியின் கண்ணீர், விக்டோரியாபாக், நல்லை காத்த நாவலன், நீர் அலைகள் அல்லது அலிமாவில் ஆகிய நாடகங்கள் இவ்விழா இடம் பெறும். (க)

## இளைஞர் மன்ற ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சொய்யாத் தோட்ட இளைஞர் மன்ற ஆண்டுவிழா இம்மாதம் 19ம், 20ம் திகதிகளில் நடைபெறுகிறது.

இவ்விழாவை ஒட்டி 5 மைல் மரதன் ஓட்டம், 10 மைல் சைக்கிள் ஓட்டம், இல்ல விளையாட்டுப்போட்டி ஆகியன இடம்பெறும். 20ம் திகதி இரவு கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். (இ)

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருப்பணிச்சபையினர், பக்தர்களை ஓய்வு நேரங்களில் நேரேவந்து தொண்டுகள் செய்யுமாறு வேண்டுகோள்விடுத்துள்ளனர்

சபையின் அடியார்கள் வீடு தோறும் சென்று நிதி சேகரிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. (க)

## சமூகத்தொண்டராக வாழ்ந்த பெரியார்



சென்ற வருடம் ஆவணிப் பௌர்ணமியில் இறைபதமடைந்த தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை முன்னைநாள் வைத்திய அதிகாரியும் ''தேவி வைத்தியசாலை உரிமையாளருமான வைத்தியகலாநிதி ச. பொன்னம்பலத்தின் சேவையைப் பாராட்டாதவர்களில்லை. ஒழுக்கத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்தவரும் சிறந்த வைத்தியரும் சமூகத் தொண்டருமாகிய வைத்தியகலாநிதியவர்களின் மறைவு எமக்கெல்லாம் ஈடுசெய்ய முடியாததொரு பேரிழப்பாகும்.

தந்தை செல்வா இறுதியாகக் சுகயீனமுற்றிருந்த போது அவரின் உயிரை மீட்பதற்கான முயற்சியில் மற்ற வைத்தியர்களுடன் இவர் இணைந்து அருப்பாடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. தான் இறைபதமடைவதற்கு முதல்நாளும் மோசமான தனது உடல்நிலையையும் பொருட்படுத்தாது வழமையான வைத்தியசேவையில் ஈடுபட்டிருந்தார். அன்னாரின் மரணவைபவத்தில் சைவக்கிரிகைகளுக்கு முன் மற்றைய மதத்தவர்கள் தங்கள் பிரார்த்தனைகளைப் பிரத்தியேகமாக நடாத்தியமையும் எல்லாத்தர மக்களும் அவர் பிரிவு தாங்காது கண்ணீர் வடித்தமையும் அவருடைய கபடமற்ற சேவைக்குச் சான்ருகும்.

யோகசுவாமிகளின் அன்பையும் அருளையும் பெறும் பாக்கியமும்கொண்டிருந்தார். உடற்பிணிக்கு உற்ற மருந்தோடு தியானம் என்னும் திருமருந்தால் உடற்பிணியையும் போக்கமுடியுமென்றுணர்ந்து அதைத் தன் வாழ்க்கையிலும் கடைப்பிடித்தவர். நள்ளிரவு வணக்கத்தில் இவருக்கோர் அக்கறை:

''உனக்கு இரவு முனிக்குப் பகல்
முனிக்கு இரவு உனக்குப் பகல்''

என்பது அவரின் இதைப்பற்றிய தத்துவம்.

வைத்தியகலாநிதி பொன்னம்பலம் அவர்கள் இறைபதமடைந்த 31ம் நாள் டேவிட் வீதியிலுள்ள அவர் இல்லத்தில் நடாத்தப்பட்ட இரங்கற் கூட்டத்திற்கு எல்லாச் சமூக, சமய இனமக்களும் வருகை தந்து அவருக்கான பிரார்த்தனையிலீடுபட்டமை ''அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்'' என்பதன் நிரூபணமாக அமைந்தது. இக்கூட்டத்தில் யாழ் திவ்ய ஜீவனசங்க பஜனைக் குழுவினரும், யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட மாணவிகளும் பக்திப்பாடல்களைப் பாடினார்கள். — தொண்டன்

## கிளிநொச்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள். அங்கிருந்து ஆனையிறவு வரை கிளிநொச்சிப் பொலிசார் பாதுகாப்பு அளிப்பார்கள்.

இரவுவேளைகளில்பஸ்வண்டிகளை ஆயுதம்தாங்கிய கோஷ்டிகள் வழிமறித்துக் கொள்ளையடிக்கும் சம்பவங்கள் அதிகரித்துவருவதால் பொலிசார் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கின்ருர்கள்.

## முருகனை.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலே ஆலய வழிபாடு ஆசாரமுறைப்படி நடைபெறுகிறது. தமிழகத்தைவிட யாழ்ப்பாணத்திலேதான் உண்மையான வழிபாட்டு முறையை காண்கிறேன். ஆலயங்களையும் நல்ல பக்திச்சூழ்நிலையில் வளர்த்துவருகிருர்கள்.

எந்தக் கஷ்டம் வந்தாலும் முருகனையே நம்பிஇருப்பவள் நான். சிறுவயதிலிருந்து முருகன்மீது பக்திகொண்டு அவனருளால் இசைஞானத்தைப் பெற்று அவனைப் பாடுவதையே தொழிலாகக்கொண்டுள்ளேன். தள்ளாத வயதிலும் என்னை இங்கு அழைத்து வந்தவன் அந்த முருகன்தான். தமிழ்மக்களாகிய நீங்களும் தமிழ்த் தெய்வமாம் முருகனை வழிபடுங்கள். அவன் உங்கள் கஷ்டங்களை நிவர்த்திசெய்வான்.

ஈழத்திலுள்ள முருகன் தலங்களில் பெயர்பெற்ற ஒன்ருன கதிர்காமக் கந்தனை தரிசிக்க மிகவும் ஆவலாயுள்ளேன். அது இம்முறை கைகூடவில்லை. மீண்டும் ஒருமுறை ஈழம்வந்து கதிர்காமக் கந்தனை தரிசிக்க விருப்பம்கொண்டுள்ளேன்,

பலகால இடைவெளியின் பின் ஈழம்வந்தநேரத்தில் பிரபல்யம் வாய்ந்த மாவிட்டபுரம் கர்தன்முன் ஆவனருளால் இசைக்கச்சேரி செய்ய முடிந்ததையிட்டு சந்தோஷப்படுகின்றேன். மாவை முருகன் அருள் வடிவானவன். மாவை ஆலயத்தை திருப்பணி மூலம் முன்னேற்ற சைவமக்கள் உதவவேண்டும். என்ருா

உங்கள் பணத்திற்கு
கூடுதல் பெறுமதியும்
பெருசக்தியும்கொண்டது
வெஸ்பா ஸ்கூட்டர்கள்

ஒயிலானது
நமக்கு ஏற்றது

VESPA
Made In Italy

இத்தாலியில் உருவாகியது.
யாழ்நகரில் சுலபமாகக் கிடைக்கிறது.

நீடித்த பாவனை ● அதிக உழைப்பு ● சொகுசான சவாரி ● இயக்க செயல்பாடு ● காதலரின் கனிவான சவாரி ● சிறந்த பயன் அனைத்தும் நிறைந்தது.

வெஸ்பா... வெஸ்பா...

வடபகுதியின் ஏக விநியோகஸ்தர்கள்:

சி. சின்னத்துரை அன்பிரதூர்

39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 284. -- தந்தி: கல்கி.

முக்கிய கவனிப்பு:

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள சின்னத்துரை அன் கொம்பனி காட்சிச்சாலையில் மொடல்களைப் பார்வையிடலாம். தொலைபேசி: 7357.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18- திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone 389 - Registered as a Newspaper in SriLanka